1981 ஆகஸ்டு 25]

வள்ளியூரில் கோ-ஆப்-டெக்ஸ் விற்பனை நிலையம் ஏற்படுத்தும் திட்டம்

*வினா எண் 60— திரு ப. நெடுமாறன்: மாண்புமிகு கைத்தறி-கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) நெல்லை மாவட்டத்தில் வள்ளியூரில் கோ-ஆப்-டெக்ஸ் கைத்தறி விற்பனை நிலையம் அமைக்கும் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: (அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள வள்ளியூரில் கோ-ஆப்டெக்ஸின் கிளை விற்பனை நிலையம் ஒன்று திறக்கவென நல்ல கட்டிடம் பார்க்கப்பட்டு வருகிறது. கட்டிடம் கிடைக்கப் பெற்றவுடன் கிளை விற்பனை நிலையம் திறக்கப்படும்.

திரு. மு. ஜான் வின்சென்ட்:— பேரவைத் தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் வள்ளியூர் நகரப் பஞ்சாயத்து கிட்டத்தட்ட 18,000 ஜனங்கள் கொண்டது. வாடகைக் கட்டிடம் கிடைப்பதாக இருந்தால் உடனடியாக ஏற்படுத்துவதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். மிக விரைவில் நாங்கள் வாடகைக் கட்டிடத்தைப் பார்த்துக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அப்படிக் கொடுத்தால் உடனடியாக கோ-ஆப்-டெக்ஸ் கைத்தறி விற்பனை நிலையத்தை அமைச்சரவர்கள் ஏற்படுத்திக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கண்டிப்பாக விரைவிலே திறக்கப்படும்.

திரு. இ. முத்துராமலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, தற்போது பெரிய நகரங்களில் மட்டும்தான் கோ-ஆப்-டெக்ஸ் கைத்தறி விற்பனை நிலையங்கள் இருந்து வருகின்றன. 25,000 மக்கள் கொண்ட அனைத்துப் பேரூராட்சிகளிலும் இதனைத் துவக்குவதற்கு அரசுக்கு உத்தேசம் உள்ளதா? ஆமெனில் எப்பொழுது அது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நகரங்களில் மட்டும்தான் கைத்தறித் துணி கிடைக்கும் வசதிகளைச் செய்யவில்லை இந்த அரசு. கிராமப்புறங்களிலும் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்ற

எண்ணத்தின் அடிப்படையில், 1980-81 ஆம் ஆண்டில் 88 புதிய விற்பனை நிலையங்களைத் தொடங்க அனுமதி அளிக்கப்பட்டு, அவைகளைத் திறக்க ஏற்பாடு நடைபெற்று வருகிறது. 1981–82 ஆம் ஆண்டில் 70 புதிய விற்பனை நிலையங்களைத் தொடங்குவதற்கான சூழ்நிலைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதில் விளாத்திகுளம், சாத்தான்குளம் போன்ற இடங்களிலும் திறப்பதற்கு முடிவெக்கப்பட்டு செயலாக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. சி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விற்பனை நிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்களில் இருக்கும் ஆடைகளை பட்டுச் சேலைகளைக் கொள்முதல் செய்வதில் தாமதமாகச் செய்வதால் விற்பனை அதிகமில்லாமல் கூட்டுறவுச் சங்கங்களில் ஏராளமான துணிகள் தேங்கிக்கிடக்கின்றன. அதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

2. தகவல் கோரல்.

அ. தலைமைச் செயலர் மாற்றம்

திரு. என். எஸ். வி. சித்தன்:— மாண்புமிகுப் பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே, தமிழ்நாடு அரசினுடைய தலைமைச் செயலாளராகப் பணியாற்றிய திரு. கார்த்திகேயன் அவர்கள் அந்தப்பொறுப்பிலேயிருந்து விடுவிக்கப்பட்டு வேறு பொறுப்பிலே அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது நிர்வாகம் பற்றிய பிரச்னை.

திரு. என். எஸ். வி சித்தன்:— நான் சொல்லி முடித்து விடுகிறேன். சென்னையிலேயிருந்து வெளிவரும் 12 ஆம் தேதிய "எதிரொலி" பத்திரிகையில், முதலமைச்சருக்கும் தலைமைச் செயலாளருக்கும் நேரடி மோதல் என்று தலைப்பிட்டு வந்திருக்கிறது. (கூச்சல்—குழப்பம்)

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் 409ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.